
# டாக் சம்வாத்

பிப்ரவரி, 2026














भारतीय डाक
डाक सेवा-जन सेवा

India Post
Dak Sewa-Jan Sewa

# பயணம்


பக்கம் எண்

1
- பூஜப்புரா தலைமை அஞ்சல் அலுவலகத்தை மாண்புமிகு பிரதமர் தொடங்கி வைத்தார்.
- அஞ்சல் நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை வலிமைப்படுத்துதலும் குடிமக்கள் சேவைகளும்

2 பாரத் சம்பார்க்: இந்தியாவின் இளம் மனங்களை ஈடுபடுத்துதல்

3 வர்த்தகச் சந்திப்பு 2025 - 2026( q -3 ): வளர்ச்சியையும், உருமாற்றத்தையும் உந்தித்தள்ளுதல்

4 சூழல் துணையமைப்புகளையும், ஊரகச்சேவை வழங்கலையும் வலிமையுறச் செய்வதில் பங்குதார ஏற்பாடு

5
- இந்திய அஞ்சல் துறை - எஸ். எஸ். எல். கூட்டிணைந்த செயற்பாடு
- இந்தியா - ஜெர்மனி - அஞ்சல் கூட்டுறவு

6
- சிறிய ஏற்றுமதியாளர்களுக்கும், எம் எஸ் எம் இ நிறுவனங்களுக்கும் அஞ்சல் அலைவரிசை ஏற்றுமதி ஆதாயங்களுடன் ஆற்றல் பெற்றுலாது.
- இந்திய அஞ்சல் துறை இதுகாறுமில்லாத வகையில் தனது முதலாவது ஒ என் டி சி ஆர்டரை நிறைவு செய்து வழங்கியுள்ளது
- ஏ டி எம் உள்கட்டமைப்பு வசதிகளில் பெருமளவுக்குப் புத்துயிர்ப்பு

7 புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

பக்கம் எண்

9 77-வது குடியரசு தினம் கொண்டாட்டங்கள்

10 பெருமிதத்தை வழங்குதல்

11 கியான் போஸ்ட்: இளம் மனங்களை வளர்த்தெடுத்தல்

12 புதிய இந்தியாவுக்காக மீள் கற்பனை செய்தல்: புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள்

14
- அஞ்சல் நாயகர்கள்
- வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டுச் சேவைகள் பேசும்போது...

15 சிறப்பு அம்சங்கள்

16 அஞ்சல்தலைகள் சேமிப்பு மூலை; அஞ்சல் தலைகளும், கதைகளும்

19 முக்கிய அம்சங்கள்




## பூஜப்புரா தகைமை அஞ்சல் நிலையத்தை மாண்புமிகு பிரதமர் தொடங்கி வைத்திட்டார்:

2026, ஜனவரி, 23 அன்று, மாண்புமிகு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில், பூஜப்புரா தலைமை அஞ்சல் நிலையத்தை முற்றிலும் நவீன மயமாக்கப்பட்ட, அப் டு டேட் டான வசதிகளுடன் தொடங்கி வைத்தார். இந்த நவீனமான அஞ்சலக வசதி, தரமுயர்த்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன், உயர்த்தப்பட்ட எண்ணியல் தொடர்புத்திறனுடன், பொதுமக்களுக்கு விரிவாக்கப்பட்ட சேவை வழங்கலுடன் நிறுவப்பட்டு, குடிமக்களை மையமிட்ட சேவைகளுக்கான இந்திய அஞ்சல் துறையின் தொலைநோக்குப்பார்வையைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. இந்தத் தொடக்க விழா, நிதியியல் உள்ளாக்கம், எண்ணியல் அதிகார பலமளித் தல், விளிம்புகளற்ற சூழல் துணையமைப்புக்ள் ஆகியவற்றின் அரசாங்க அளவிலான முன்னுரிமைகளுக்கு ஆதரவளிப்பதையும், தெற்கு மண்டலத்தில் அஞ்சல் சேவைகளை வலிமைப்படுத்துவதில் இந்திய அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதியையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குகிறது.



## அஞ்சல் உள்கட்டமைப்பு வசதிகளையும், குடிமக்கள் சேவைகளையும் வலிமைப்படுத்துதல்:

தகவல் தொடர்புகள் துறை மற்றும் வடகிழக்குப் பகுதிகளின் மேம்பாட்டு வளர்ச்சித்துறைகளின் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்திய எம்.சிந்தியா அவர்கள், ஆறு புத்தமைக்கப்பட்ட அஞ்சல் அலுவலகங்களைத் தொடங்கி வைத்தார். மத்தியப்பிரதேச மாநிலம் நெடுக ஜனவரி 8 -ஆம் தேதி முதல் 11 - ஆம் தேதி வரை அமைச்சர் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களின் போது மேற்கண்ட ஆறு அஞ்சல் நிலையங்களைத் தொடங்கி வைத்தார்.
கோலராஸ், ஜகத்புரா, படர்வாஸ், பிச்ஹோர், காத்தமில், மற்றும் நகர அஞ்சல் அலுவலகம் ஆகிய இடங்களிலுள்ள துணை அஞ்சல் நிலையங்கள் உள்ளிட் டவை மேற்கண்டவாறு தரமுயர்த்தப்பட்ட வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. வாடிக்கையாளர்களுக்கு முன்னேற்றகரமான சாதனங்களுடன் தங்களைப் புதுப்பித்துக் கொண்டுள்ள இந்த அஞ்சலகங்கள், இந்திய அஞ்சல் துறையின் சேவைகளுக்கு விளிம்புகளற்ற அணுகல் வழிகளை முன் வைக்கின்றன. கடிதங்கள், பார்சல்கள் வழங்கல், சேமிப்பு, காப்பீட்டுத்திட்டங்கள், எண்ணியல் சேவைகள், நிதி உள்ளாக்க முன்னெடுப்புகள்- அதிகரிக்கப்பட்ட செயற்திறன், மற்றும் வெளிப்பகுதிகளைச் சென்றடைதல்- குறிப்பாக, அரை நகர்ப்புறங்கள் மற்றும் ஊரகப்பகுதிகளைச் சென்றடைதல் - போன்ற சேவை களை இவை வழங்குவதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டுள்ளன. அதோடு, ஏழாவது அஞ்சல் பயிற்சி நிலையம் ஒன்றை ரூ. 111 கோடி முதலீட்டில் ஷிவ்புரி என்ற இடத்தில் அமைக்கவிருப்பதாக ஓர் அறிவிப்பையும் அமைச்சர் வெளியிட்டார். இதன் மூலம் அஞ்சலியல் பயிற்சிக்கான சூழலியல் அமைப்புகளை வலிமைப்படுத்தும், மற்றும் ஷிவ்புரி நகரை சஹாரன்பூர், வடோதரா, மைசூரு, குவாஹாத்தி, மதுரை, தர்பங்கா ஆகிய பயிற்சி நிலையங்களை போல் ஒரு முதன்மையான பயிற்சி மையமாக ஆக்கும் திட்டம் இது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.



## பாரத் சம்பார்க்; இளம் மனங்களை ஈடுபடுத்துதல்;

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

வெளிப்பகுதிகளைச் சென்றடைதல் என்பதற்கான முன்னெடுப்பான "பாரத் சம்பார்க்" - "இந்தியாவின் இளம் மனங்களை ஈடுபடுத்ததுதல்" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, தகவல் தொடர்புகள் மற்றும் வடகிழக்குப்பகுதிகளின் மேம்பாட்டு வளர்ச்சி - ஆகிய துறைகளின் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்திய எம்.சிந்தியா அவர்கள், டெல்லியிலுள்ள இந்தியத் தொழில் நுட்பக்கழகத்தின் வளாகத்தைப் பார்வையிட்டதுடன் மாணவர்களோடு ஒரு கலந்துரையாடல் அமர்விலும் பங்கேற்று உரையாடினார்.
இந்தக்கலந்துரையாடலின் போது, மத்திய அமைச்சருடன் மாணவர்கள் பல்வேறு வீச்செல்லையுள்ள பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தனர். தொழில்நுட்பங்களைச் சுவீகரித்தல், சூழல் துணையமைப்புகள், புத்துருவாக் கம், ஆராய்ச்சிகளுடன் கூட்டிணைந்த செயற்பாடு, பொது நிறுவனங்களில் இளைஞர்கள் பங்கேற்புக்கான வாய்ப்புகள் ஆகிய பிரச்னைகள் மேற்கண்ட கலந்துரையாடலில் உள்ளடங்கியவையாக இருந்தன. நாட்டைக் கட்டியெழுப்புத லிலும், பொதுச்சேவை உருமாற்றத்திலும் செயலூக்கமிக்க பங்கேற்பாளர்களாக மாணவர்கள் முன்வர வேண்டுமென்று மத்திய அமைச்சர் அவர்களை உற்சாக மூட்டினார்.

அரசாங்க நிறுவனங்களுடன் உயிர்த்துடிப்புள்ள ஈடுபாடு, எதிர்காலப் பணி வாய்ப்புகள் ஆகியவற்றைப்பற்றிய மாணவர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கும் விதத்தில் மத்திய அமைச்சர், இந்திய அஞ்சல் துறை முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பவியல் தரமுயர்த்துதுலுக்கும், அமைப்பு ரீதியான உருமாற்றத்திற்கும் உட்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். சூழல் துணையமைப்புகள், குடிமக்கள் மையச் சேவைகள், நிதியியல் உள்ளாக்கம், எண்ணியல் சேவைகள் வழங்கல் ஆகியவற்றில் இந்திய அஞ்சல்துறையின் விரிவாக்கப் பாத்திர வகிப்புப் பற்றியும் அவர் வெளிப்படுத்திக் காட்டினார்.
எனவே, இளநிலைப் பயிற்சி, உயிராற்றல் மிக்க செயல் திட்டங்கள், புத்துருவாக்கத்தால் உந்தித்தள்ளப்படும் கூட்டிணைந்த செயல்பாடு கள் ஆகியவற்றின் மூலம் அஞ்சல்துறையுடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தப்பயணத்தின் போது, டெல்லி ஐ ஐ டி வளாகத்திலுள்ள புதிய தலைமுறை அஞ்சல் நிலையத்திற்கும் வருகை தந்து பார்வையிட்டார். அது இளைய தலைமுறையை மையமிட்ட, எண்ணியல்ரீதியாக ஆற்றல் பெற்றிருக்கிற அஞ்சல் வசதிகள்கொண்ட, மாணவர்களின் வடிவமைப்புகளாக அமைந்த உள்புற அலங்கரிப்புகள், இலவச வை-பி, qr அடிப்படையிலான சேவைகள் மற்றும் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கென்றே அர்ப்பணிப்புள்ள கவுன்ட்டர்கள் ஆகிய அம்சங்களுடன் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.




## வர்த்தகச் சந்திப்பு 2025 - 2026( q -3 ): வளர்ச்சியையும், உருமாற்றத்தையும் உந்தித்தள்ளுதல்

தகவல் தொடர்புகள் துறையின் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்திய எம். சிந்தியா அவர்கள், இந்திய அஞ்சல்துறையின் வளர்ச்சியையும், உருமாற்றத்தையும் விரைவுபடுத்தி உந்தித்தள்ளுவதற்கான ஓர் உயர்மட்ட q 3 வணிகங்கள் தொடர்பான ஒரு பரிசீலனைக் கூட்டத்திற்குத் தலைமையேற்று நடத்தினார். தகவல் தொடர்புகள் துறையின் ராஜ்ய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மாசானி அவர்கள் மெய் நிகர் நேரலையின் மூலம் விவாதங்களில் பங்கேற்றார். இந்திய அஞ்சல்துறைச்செயலாளர் திருமதி. வந்திதா கவுல் அவர்களின் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. அஞ்சல் வட்டங்கள் வாரியாகவும், செங்குத்து நிலைகள் வாரியாகவும் செயற்திறன் வெளிப்பாடுகள், சேவைகளின் தரம், நடவடிக்கைகள் சார்ந்த செயற்திறன், வருமானங்களின் வளர்ச்சி ஆகியவை, விக்ஷித் பாரத்தின் தொலைநோக்குப் பார்வையோடு ஒத்திசைந்து செல்கின்றனவா என்ற கோணத்தில் இந்த மீளாய்வு கவனம் குவித்தது. மிகச்சிறப்பான நடைமுறைகளைத் திரும்பத் திரும்பப் பின்பற்றுவது, கட்டுப்பாடுமிக்க நடைமுறையாக்கம் மூலமாக சர்வதேசக்கடிதங்களின் போக்குவரத்து, சூழல் துணையமைப்புகள், பாரசல்கள் வழங்கல் ஆகியவற்றை வலிமைப்படுத்த வேண்டுமென்ற அம்சத்தை மாண்புமிகு அமைச்சர் அழுத்தம் தந்து வலியுறுத்தினார்.

2025 - 2026 -ஆம் நிதியாண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் 10,155 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டியுள்ளது. வருடா வருடம் 8.2 சதவீத வளர்ச்சியை இது பதிவு செய்துள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, ராஜஸ்தான் அஞ்சல் வட்டமே மிகச்சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்தி யுள்ளது. அஞ்சல் நிலையச்சேமிப்பு வங்கியின் செயற்பாட்டில் கர்நாடக அஞ்சல் வட்டம் முன்னணியில் உள்ளது. டெல்லி, மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய அஞ்சல் வட்டங்களின் முதன்மையாகத் தலைமை வகிக்கும் செயற்திறன் வெளிப்பாடுகளோடு, குடிமக்களை மையமிட்ட சேவைகள் அசாதாரணமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அஞ்சல் நிலைய ஆயுள் காப்பீட்டுத்திட்டத் தைப் பொறுத்தவரை,உத்தரபிரதேச அஞ்சல் வட்டம் மிகச்சிறப்பான முதல் நிலைச்செயற்பாட்டாளராக உள்ளது. செங்குத்து நிலைகளில் செயற்திறன் வெளிப்பாடுகளைப் பரிசீலனை செய்த மாண்புமிகு அமைச்சர், பார்சல்கள், அஞ்சல் ஆயுள் காப்பீடு, அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி, குடிமக்களை மையமி ட்ட சேவைகள் ஆகியவற்றில் அஞ்சல் துறை மிக வலிமையான வளர்ச்சி கண்டிருப்பதைப் பாராட்டியதுடன், களங்களைப் பார்வையிட்டு, கள அளவில் செயற்திறன் வெளிப்பாடுகளை வலிமைப்படுத்துமாறு செங்குததுநிலைத் தலைமை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.




## சூழல் துணையமைப்புகள், ஊரகச்சேவைகள் வழங்கல் ஆகியவற்றை வலிமைப்படுத்துவதில் பங்கேற்றல்

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஊரக மேம்பாட்டு வளர்ச்சி அமைச்சகம், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறைகளுடன் இந்திய அஞ்சல்துறை ஒரு வரலாற்றுச்சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஊரக மேம்பாட்டு வளர்ச்சி யில் ஒரு முதன்மை நடைமுறையாக்க முகவர் மற்றும் அகில இந்திய அளவில மைந்த சூழல் துணையமைப்புகளில் ஒரு முதுகெலும்பாக இந்தியஅஞ்சல் துறையின் பாத்திரம் அமைகிறது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துவதாக இந்த ஒப்பந்தம் உள்ளது. மேற்கண்ட இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மாண்பு மிகு மத்திய தகவல் தொடர்புகள் மற்றும் வடகிழக்குப்பகுதிகளின் மேம்பாட்டு வளர்ச்சித் துறைகளின் அமைச்சரான திரு. ஜோராதித்திய எம். சிந்தியா, மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வேளாண்மை,விவசாயிகள் நலத்துறைகளின் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் ஆகியோரின் முன்னிலையில் கையெழுத்தாகின.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையுடன் ஒரு பங்காளி என்கிற வகையில், இந்திய அஞ்சல் துறை விவசாயத்திற்குத் தேவையான, கள ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்ட உரங்களின் மாதிரிகள், விதைகள், கிருமி நாசினி ஆகியவற்றைக் கொண்டு சேர்ப்பதில் பாதுகாப்பான, ஒரு முனையி லிருந்து மறு முனைக்கு, பின் தொடர்ந்து செல்வதற்கேற்ற, கால நிர்ணயத்திற் குட்பட்ட சூழல் துணையமைப்புகளை உருவாக்கித்தரும். தொலைதூர மூலை மூடுக்குகளிலும், ஊரகப்பகுதிகளிலும் உள்பட, நாடு தழுவிய, கடைசி மைல் வரை பரவியுள்ள விரிந்து பரந்திருக்கும் வலைப்பின்னல் இணைப்புகள் போன்ற அமைப்புகளை அஞ்சல்துறை உந்தித்தள்ளும்.
ஊரக வளர்ச்சித்துறைஅமைச்சகத்தோடு தன்னுடைய கூட்டிணைந்த செயற் பாட்டின் மூலமாக, இந்திய அஞ்சல்துறை பேமெண்ட்ஸ் வங்கி,ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் கூடவங்கிச்சேவைகளை வழங்கும். சேமிப்புகள், பணம் செலுத்து கைகள், பயணம் போடுதல்கள் போன்ற வங்கிச்சேவைகளைத் தன்னுடைய எண்ணியல் சாத்தியங்கள் கொண்ட மேடை மூலம் இந்திய அஞ்சல்துறை வழங்கும். மின்னணுவியல் டேப்லட்டுகள், pos கருவிகள் ஆகியவற்றின் உதவி யோடு மகளிர் சுய உதவிக்குழுக்களை அதிகாரவலிமையுடையவையாக ஆக்கி உதவும். இவற்றின் மூலம், பணப்பரிவர்த்தனைகள், மேம்படுத்தப்பட்ட பதிவேட் டுப்பராமரிப்பு, வலிமை மிக்க நிதியியல் மற்றும் சந்தை இணைப்புகளை விவசாயிகளுக்கு, குறிப்பாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அஞ்சல் துறை வழங்கும்.

ஒன்றிணைந்த இந்த ஏற்பாடுகளின் மூலம், எண்ணியல் நிதிச்சேவைகள், நம்பகத்தன்மை வாய்ந்த சூழல் துணையமைப்புகள் மூலமாகக் கடைசி மைல் இணைப்புத்திறன் மற்றும் அதிகார வலிமை ஆகியவற்றை விரிவாக்கம் செய்வதை நோக்கி இப்பங்குதாரர் ஒப்பந்தங்கள் ஒரு குறிப்பிடத்தக்க அடிவைப்பை எடுத்து வைத்துள்ளன.




## இந்திய அஞ்சல்துறை - எஸ் எஸ் எல் கூட்டிணைந்த செயற்பாடு:

இந்திய அஞ்சல்துறை, ஸ்டாக் ஹோல்டிங் சர்வீசஸ் லிமிடெட் ( ssl ) நிறுவனத் துடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது நிதி உள்ளாக்கத்தை மேலும் முன்னெடுக்கும். குடிமக்களுக்கு இந்திய அஞ்சல் துறையின் விரிவாக்கப்பட்டுள்ள, நாடு தழுவிய வலைப்பின்னல் அமைப்பின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதனச்சந்தைச்சேவைகளை விரிவாக்கி வழங்க இது செய்யப்பட்டுள்ளது இந்த ஒப்பந்தத்தின் கீழ், எஸ் எஸ் எல் சேவை களைக் குடிமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அஞ்சல் நிலையங்களிலும், அதிகாரப் பூர்வ மேடைகளிலும் எளிதில் அணுகிப்பபெற முடியும். க்யூ ஆர் கோடு கள், ஆன் போர்டிங் இணைப்புகள் போன்ற எண்ணியல் யுட்டிலிட்டிகள் மூலம் மேற் கண்டவாறு சேவைகளைப் பெறலாம். டி மாட் மற்றும் வர்த்தகக் கணக்கு களைத் தொடங்குவது, பரஸ்பர நிதி முதலீடுகளை மேற்கொள்வது, ஐ பி ஓ க்க ளில் பங்கேற்பது, மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்க ளைப் பயன்படுத்துவது போன்ற வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதை மேற்கண்ட ஏற்பாடுகள் சாத்தியமாக்கும். எஸ் எஸ் எல் நிறுவனத்துடன் பங்கு தார ஒப்பந்தத்தின் முதன்மைக் கவனக்குவிப்பு என்பது, நிதியியல் விழிப்புணர்வு, முதலீட்டாளர் கல்வி ஆகியவற்றை இந்திய அஞ்சல்துறையின் ஆதர வோடு முன்னெடுத்துச் செல்வதேயாகும். அஞ்சல்துறை, முதலீட்டாளர் கல்வி, நிதியியல் எழுத்தறிவுக்கல்வித் திட்டங்கள் மூலம் நிதியியல் சந்தைகளில் விவரமறிந்து பங்கேற்பதற்கும், குறிப்பாக முதல் தடவையாக முதலீட்டாளர் களாக முயல்பவர்கள், ஊரக - அரை நகர்ப்புறங்களிலுள்ள குடிமக்கள் ஆகியோருக்கு உதவ இந்த ஒப்பந்தம் வகை செய்யும்




## இந்திய - ஜெர்மனி அஞ்சல் ஒத்துழைப்பு:

இந்த மாதத்தின் போது, இந்திய அஞ்சல்துறை தன்னுடைய உலகளாவிய, நிறுவனரீதியான பங்குதாரர் ஏற்பாடுகளை மேலும் வலிமைப்படுத்திக் கொண்டுள்ளது. போஸ்டல்,எக்ஸ்ப்ரஸ் அண்ட் லாஜிஸ்டிக்ஸ் சர்வீஸஸ் ஆகிய துறைகளில் இந்தியாவும், ஜெர்மனியும் தங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்கிக்கொண்டுள்ளன. ஒரு நோக்கத்தின் இணைந்த பிரகடனம் (JDI) மற்றும் ஒரு நோக்கத்தின் கடிதம் (Lol) ஆகியவி, இந்திய அஞ்சல் துறைக் கும், ஜெர்மன் அஞ்சல் துறைக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

இரு தரப்புகளின் நோக்கம் பற்றிய பிரகடனத்தில், இந்திய அரசாங்கத்தின் சார்பில் அஞ்சல் துறைச்செயலாளரான திருமதி வந்திதா கவுல் அவர்களும், இந்தியாவுக்கான ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தூதர் டாக்டர் பிலிப் அக்கெர்மான் அவர்களும் கையெழுத்திட்டுள்ளனர். ஒரு நோக்கத்தின் கடிதத்தில் அஞ்சல்துறையின் சார்பில் அஞ்சல் சேவைகளின் பொது இயக்குந ரான டாக்டர் ஜிதேந்திரகுப்தா அவர்களும், Deutche அஞ்சல்துறைக்காக Deutche அஞ்சல்துறையின் AG/DHL குழுவின் திரு. தோபியாஸ் மேயர் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்தப் பங்குதாரர் ஏற்பாடு, பின் வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது: எல்லைகள் கடந்த மின் வர்த்தகம், திட்டவட்டமான நேர நிர்ணய அடிப்படையில் சர்வதேச வர்த்தக வழங்கல்கள், வலைப்பின்னல் இணைப்புத்திறன், கடைசி மைல் வரை எட்டும் நடவடிக்கைகள் -

இவற்றோடு, எண்ணியல் மயமாக்கம், நடவடிக்கைகள் சார்ந்த செயற்திறன், நிலைத்து நீடித்திருக்கக்கூடிய சூழல் துணையமைப்புகள் ஆகியவற்றின் மீதும் கவனங்குவித்துள்ளது. சர்வதேசச் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவது, உலகளாவிய சந்தை அணுகல்களை விரிவுபடுத்துவது - குறிப்பாக,சிறிய ஏற்றுமதியாளர்களுக்கும், MSMEs நிறுவனங்களுக்கும் - ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு இந்தப் பங்கு தாரர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சிறிய ஏற்றுமதியாளர்களுக்கும், எம் எஸ் எம் இ நிறுவனங்களுக்கும் ஏற்றுமதி ஆதாயங்களைச் சாத்தியப்படுத்தும் அஞ்சல் அலைவரிசை:

அஞ்சல் துறை, தகவல் தொடர்புகள் அமைச்சகம் ஏற்றுமதி ஆதாயங்களின் விரிவாகத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது - சுங்கவரிகள் சார்ந்த பின்னடைவு, சுங்கவரிகளின் ரெமிஸன், ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப்பொருள்களுக் கான வரிகள் ( Rodtep ), மாநில - மத்திய வரிகள் / லெவிகளில் ரிபேட்( rosctl ), - போன்ற, ஏற்றுமதிகளுக்கான கட்டணங்களை அஞ்சல் அலைவரிசையின் மூலம் செலுத்துகிற வசதி, 2026, ஜனவரி 15 அன்று நடைமுறைக்கு வந்துள்ளது. மறைமுக வரிகளையும், சுங்கவரிகளையும் சார்ந்த மத்திய வாரியத்தால் விநியோகிக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மேற்கண்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.
இந்த முன்னெடுப்பு, ஏற்றுமதிகளுக்கான அணுகல் வழிகளை எளிமைப்படுத்து வதற்காகவும், விரிந்து பரந்தவையாக்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரதானமான அடிவைப்பாகும். குறிப்பாக, எம் எஸ் எம் இ நிறுவனங்கள், கைவினைக் கலைஞர்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், சிறிய ஏற்றுமதியாளர் கள் ஆகியோர் பெருமளவிற்குக் குறைந்த, நடுத்தர மதிப்புள்ள சர்வதேச ஏற்றுமதிப் பொருள்களை அனுப்புவதற்கு அஞ்சல் துறை வலைப்பின்னலமைப் பினையே சார்ந்திருக்கின்றனர். ஏற்கெனவே தானியங்கி முறையில் ஐ ஜி எஸ் டி கட்டணங்களைத் திரும்பப்பெறக்கூடிய வசதிகள் நடைமுறையிலிருக்கும் நிலையில், அஞ்சல் அலைவரிசையின் மூலமாக ஏற்றுமதிகளுக்கான ஊக்கத் தொகைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதென்பது மேற்கொண்டு விலைகளை / செலவுகளைக் குறைப்பதற்கு உதவும். எளிதாகப் பணத்தைத் திரட்டக்கூடிய வசதியை மேம்படுத்தும். இந்தியா ஏற்றுமதியாளர்களின் வணிகப் போட்டித்திறன்களை அதிகரிக்கும்.

## இந்தியா அஞ்சல் துறை, தனது முதலாவது ONDC ஆர்டரை நிறைவேற்றி உள்ளது:

எண்ணியல் வர்த்தகத்திற்கான திறந்த வலைப்பின்னல் அமைப்பு ( ONDC ) மூலம், இந்திய அஞ்சல் துறை, சூழல் துணையமைப்புகள் சேவை வழங்குநர் எனும் முறையில், தனது முதல் ஆன்லைன் ஆணையை வெற்றிகரமாக முடித்து வழங்கியிருப்பதன் மூலம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மைல் கல் சாதனை யைச் செய்துள்ளது. இதனால், கட்டுபடியாகக்கூடிய, எளிதில் அணுகக்கூடிய மின் வர்த்தகச்சூழல் துணையமைப்புகளைச் சாத்தியப்படுத்துவதில் தனது பாத்திர வகிப்பைக் கூடுதல் வலுவுடன் உறுதிப்படுத்தியிருக்கிறது. ஓ என் டி சி - யுடன் அஞ்சல் துறையின் ஒருங்கிணைவு, விற்பனையாளர்கள் ஓ என் டி சி சாத்தியப்படுத்தும் வாங்குவோர் விண்ணப்பங்களைப் பயன்படுத்தி, ஒரு முனையிலிருந்து மறு முனைக்குப் பார்சல் சேவைகளை வழங்க இந்திய அஞ்சல் துறையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பிக் - அப், பதிவு செய்தல், கொண்டு சென்று சேர்த்தல், வழங்கல் உள்ளிட்ட சேவைகள் அவை. நாடு முழுவதும் விரிந்து பரவியுள்ள அஞ்சல் வலைப்பின்னல் அமைப்பையும், கடைசி மைல் வரை சென்றடையும் அதன் திறனையும் உந்தித்தள்ளியிருக்கிறது.
தற்போது, இந்திய அஞ்சல் துறை ONDC -யில் Click & Book" மாதிரியில் லைவ் ஆக உள்ளது. இந்த வசதி, எண்ணியல் ரீதியில் விற்பனையாளர்கள் பிக் அப் வேண்டுகோள்களை உருவாக்கி அனுப்புவதைச் சாத்தியப்படுத்துகிறது. தங்களுடைய சூழல் துணையமைப்புகளின் பங்குதாரராக இந்திய அஞ்சல் துறையை அவர்கள் தேர்வு செய்வதையும் சாத்தியமாக்குகிறது. அதோடு, அவர்களுடைய விற்பனை நிலையங்களிலிருந்தே நேரடியாகப் பார்சல்களைச் சேகரித்துக் கொண்டு செல்லவும் வழி வகுக்கிறது. இந்த முன்னெடுப்பு, கடைசி மைல் வரை சென்று பார்சல்களை வழங்க முடிவதை மேலும் விரிவாக்கி வலிமைப்படுத்துகிறது. மேலும், எம் எஸ் எம் இ நிறுவனங்கள், சிறிய விற்பனையாளர்களுக்கு விளிம்புகளற்ற, கட்டுப்படியாகக் கூடிய செலவிலமைந்த சூழல் துணையமைப்புகளின் சேவைகள் மூலமாகத் தங்களுடைய சந்தையைச் சென்றடைய முடிவதை விரிவாக்குவதற்கும் ஆதரவளிக்கிறது.

## ATM உள்கட்டமைப்பின் பிரதானமான புத்துருவாக்கம்:

அஞ்சல் துறை, வங்கிச்சேவைகளை மேலும் அதிக, எளிய அணுகல் வாய்ப்புக ளையும் நுகர்வோர் நட்புணர்வையும் கொண்டவையாக ஆக்குவதை நோக்கிய ஒரு பிரதானமான அடிவைப்பில், தனது ஏ டி எம் உள்கட்டமைப்புகளை நாடு நெடுகிலும் புத்துருவாக்கம் செய்திருக்கிறது. பல்வேறு அஞ்சல் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள 887 ஏ டி எம் கள், குடிமக்களுடைய வீடுகளுக்கு நெருக்கமாக அத்தியாவசியமான வங்கிச்சேவைகளை எளிதில் அணுகும் வகையில் அவர்க ளுக்கு உதவி புரிகின்றன. இந்த முன்னெடுப்பு, ஊரக - மற்றும் குறைவாகவே சேவைகள் வழங்கப்படும் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குறிப்பாக ஆதாயம் அளிக்கக்கூடியவையாக உள்ளன. அதன்முலம், எண்ணியல் உருமாற்றத்தின் வழியாக நிதியியல் உள்ளாக்கத்தை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்தின் தொலை நோக்குப்பார்வைக்கு ஆதரவளிக்கின்றன. மேற்கண்ட ஏ டி எம் கள் மூலமாக, நுகர்வோர் மிகவும் சவுகரியமான முறையில் பணத்தைப் போடலாம்; எடுக்கலாம்,கணக்குகளில் இருப்புத்தொகை விவரங்களைச் சரிபார்க்கலாம்; மேலும் அடிப்படையான வங்கியியல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும் முடியும்.

## புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்:

புத்தாண்டின் தொடக்கத்தைக் கொண்டாடும் வகையில் வெதுவெதுப்பான, மனம் நிறைந்த நன்றியறிதலை மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் துறை அமைச்சர் திரு.ஜ்யோதிராதித்திய எம்.சிந்தியா அவர்கள், நாடு முழுவதிலு முள்ள நுகர்வோருக்கும், பிற பங்களிப்பாளர்களுக்கும், இந்திய அஞ்சல் துறையில் அவர்கள் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் நம்பிக்கைக்காகத் தமது இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். சிறப்பு வெளி வட்டாரங்களைச் சென்றடைவதற்கான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, பல்வேறு மாநிலங்களிலும் உள்ள மதிப்புமிகு வாடிக்கையாளர்களுக்குத் தனிப்பட்ட முறையில் புத்தாண்டு வாழ்த்துகளையும், பாராட்டுக்கடிதங்களை யும் அஞ்சல் துறை வழங்கியது. ஆண்டின் முதல், தொடக்க நாளிலேயே குடிமக்கள் ஈடுபாடு, நல்லெண்ணம், நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும் விதத்தில், அஞ்சல்துறையுடன் அவர்களுடைய நிலைத்து நீடித்திருக்கும் நட்புணர்வுப் பங்காளி உறவையும், பகிர்ந்து கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பயணத்தையம் கொண்டாடுவதாக இதுஅமைந்திருந்தது.














மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் மற்றும் ஊரக மேம்பாட்டு வளர்ச்சித் துறையின் ராஜீய அமைச்சர், டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி அவர்கள், இந்திய அஞ்சல்துறைக் குடும்பத்தினருக்கும், அனைவருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார். கடந்து சென்ற ஆண்டைப்பற்றி அவர்கள் பிரதிபலிப்பில், அஞ்சல்துறை ஊழியர்களின் அர்ப்பணிப்புணர்வை யும், கூட்டு முயற்சிகளையும் ஏற்று அங்கீகரித்துள்ளார். இணைப்புத்திறனை வலிமைப்படுத்துவது, சேவைகளுக்குக் குடிமக்களின் அணுக்கள் வாய்ப்புகளை விரிவுபடுத்துவது, பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்துவது ஆகியவற்றில் அவர்களின் பங்களிப்பினைப் பாராட்டியுள்ளார்,

இந்த இயங்குவிசையை முன்னெடுத்துக்கொண்டு செல்ல வேண்டுமென உற்சாகப்படுத்தியுள்ள மாண்புமிகு அமைச்சர், அடுத்து வரவிருக்கும் ஆண்டில், உருமாற்றம் அடைவதில் தொடர்ச்சியான பற்றுறுதிக் கடப்பாட்டுணர்ச்சி, சேவைகளில் பெருமிதம், புத்துயிரளிக்கப்பட்ட குறிக்கோள் ஆகியவற்றுக்காக அழைப்பு விடுத்திருப்பதுடன், டாக் சேவை - மக்கள் சேவை என்பதன் உத்வேகத் தையும் மீண்டும் மீள் உறுதிப்படுத்தியுள்ளார்.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

அஞ்சல்துறைச் செயலாளரான திருமதி வந்திதா கவுல் அவர்கள், தனது புத்தாண்டுச் செய்தியில், புத்தாக்கப் படைப்பூக்கம், எண்ணியல் சாத்தியமாக் கல், குடிமக்கள் மையமிட்ட சேவை வழங்கல் ஆகியவற்றின் மீது இந்திய அஞ்சல் துறையின் தொடர்ந்த கவனக்குவிப்பை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார். துரையின் அடித்தள விழுமியங்களாக நம்பிக்கையையும், சேவை யையும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். அடுத்து வரவிருக்கும் ஆண்டில் சேவை நிபுணத்துவம், நிறுவனரீதியான செயற்திறன் ஆகிய அம்சங்களுக்குத் துறையின் பற்றுறுதிக் கடப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

## 77 -ஆவது குடியரசுதினக் கொண்டாட்டங்கள்:













இந்திய அஞ்சல்துறையின் 23 அஞ்சல் வட்டங்கள் அனைத்திலும் 77 - ஆவது குடியரசு தினக்கொண்டாட்டங்களை அஞ்சல் துறை நடத்தியது. நாடு பூராவிலும் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தேசியக்கொடிகள் ஏற்றப்பட்டன. நாட்டு ஒற்றுமை, நம்பிக்கை, சேவை - ஆகியவற்றுக்கு அஞ்சல் துறையின் நிலை தடுமாற்றமில்லாத பற்றுறுதிக் கடப்பாட்டை மீளவும் உறுதி செய்திருக்கிறது.

ஜனவரி 26, 2026 அன்று, சிம்லாவிலுள்ள வரலாற்றுப்புகழ் மிக்க ரிட்ஜ் மைதானத் தில் குடியரசு தின அணிவகுப்பின் போது, இமாச்சலப் பிரதேச அஞ்சல் வட்டத் தின் அஞ்சல் ஊழியர் பிரிவு பெருமிதத்துடனும், தனிச்சிறப்புடனும் பங்கேற்றது. கட்டுப்பாடு, அர்ப்பணிப்புணர்வு, நாட்டுப் பற்றுணர்ச்சி - ஆகியவற்றை அடையாளப்படுத்தி அணிவகுத்த இப்பிரிவு, ஒரு கண்கவர் பட்டாள நடை போட்டு அணிவகுப்பில் பங்கேற்றது. அஞ்சல் துறையின் சேவை விழுமியங்க ளைப் பிரதிபலிப்பதாக இது அமைந்திருந்தது.

77 - ஆவது குடியரசுதின விழாவின் போது, நாடு நெடுகிலுமுள்ள அஞ்சல் அலுவலகங்கள் அனைத்தும் தேசியக்கொடியின் நிறங்களில் ஒளிர்ந்த விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நகர்ப்புற மையங்களிலிருந்து சிறிய நகரங்கள் வரை, அஞ்சல் நிலையக் கட்டடங்கள் அனைத்தும் மூவண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.ஒற்றுமை, அரசியலமைப்பு ரீதியான விழுமியங்கள், இந்த நாட்டுடனும், இதன் மக்களுடனும் இந்திய அஞ்சல் துறையின் ஆழமான இணைப்பு ஆகியவற்றை மேற்கண்ட அலங்காரங்கள் அடையாளப்படுத்தின.







## பெருமிதத்தை வழங்கல்:













வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இந்தியாவின் குடியரசுத்தலைவருக்காக ராஷ்டிரபதி பவனிலிருந்து நாடு பூராவிலும் உள்ள தனிச்சிறப்பு மிக்க குடிமக்களுக்கு 'இல்லத்தில் வரவேற்பு'க் கான அழைப்பிதழ்களை அனுப்பும், கடிதங்களை வழங்கும் கவுரவமிக்க பொறுப்பு இந்திய அஞ்சல் துறைக்கு வழங்கப்பட்டது.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இந்தச் சிறப்பு மரபொழுங்கு நடைமுறை அழைப்பிதழ்கள் மாநகரங்கள், கிராமங்கள், காடுகள், நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் வாழ்கிற பத்ம விருதுகள் பெற்றவர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர்கள், சமூகப்பணிகளில் பங்களிப்போர் போன்றவர்களுக்கு சென்று சேரும் வகையில் வழங்கப்பட்டன. மிக அதிகபட்ச அக்கறையுடனும், நேரக்கட்டுப்பாட்டிற்குள் செய்து முடிக்க வேண்டிய விரைவுடனும் வழங்கப் பட வேண்டுமெனக் கோருபவை இவை. இந்தப்பெருமிதமிக்க பொறுப்பைத் துல்லியத்துடனும், அர்ப்பணிப்புணர்வுடனும் இந்திய அஞ்சல் துறை நிறைவேற்றியுள்ளது. நாடு நெடுகிலும் பாதுகாப்பாக, குறித்த நேரத்திற்குள் சென்று சேரும் விதமான வழங்கலை இது உறுதி செய்துள்ள அதே சமயம், தனது பாரம்பரியச் சிறப்புமிக்க நம்பிக்கை, செயற்திறன்களை இந்திய அஞ்சல் துறை உயர்த்திப் பிடித்துள்ளது.

# க்யான் போஸ்ட்: இளம் மனங்களை வளர்த்தெடுத்தல்:

வசந்த பஞ்சமி நிகழ்வையொட்டி, அனைத்து 23 அஞ்சல் வட்டங்களிலும் குழந்தைகளுக்குப் புத்தகங்களை விநியோகிக்கும் விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அறநெறிக் கதைகள், அஞ்சல்தலைகள் சேகரிப்புகள் பற்றிய நூல்கள் வழங்கப்பட்டன. படிக்கும் பழக்கத்தை முன்னெடுப்பதை இந்த முயற்சி குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அஞ்சல் தலைகளின் வசீகரமான கவர்ந்து ஈர்க்கும் உலகை அறிமுகம் செய்பவையாக இந்த நூல்கள் இருந்தன. இளம் உள்ளங்களில் சிறந்த விழுமியங்களைக் கதைகள் மூலம் நிறுவும் இந்த முயற்சி, கற்றல், புதியனவற்றை அறிய விரும்பும் குறுகுறுப்பு, படைப்புக்கத் திறன் ஆகியவற்றை வளர்த்தெடுப்பதில் இந்திய அஞ்சல் துறையின் பாத்திர வகிப்பை மேலும் வலுப்படுத்தியது.

இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் துறை அமைச்சர் திரு. ஜயோதிராதித்திய எம்.சிந்தியா மற்றும் மாண்புமிகு தகவல் தொடர்புகள் துறை ராஜீய அமைச்சர் டாக்டர்.சந்திரசேகர் பெம்மசானி ஆகியோரின் சிறப்புச் செய்திகள் இடம்பெற்றிருந்த அஞ்சல் அட்டைகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. அந்தச் செய்திகள், அறிந்து கொள்ளும் ஆர்வக் குறுகுறுப்பைக் கொழுந்து விட்டு எரியச் செய்வது, வலிமையின் ஒரு மூல வளமாகக் கல்வியைத் தழுவிக்கொள்வது, கற்றலை ஓர் ஆர்வவெறியுடன் முன்னெடுப்பது போன்ற விழுமியங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்து உற்சாகமூட்டுபவையாக இருந்தன.


ஹிமாச்சல் பிரதேசம்



சத்தீஸ்கர்


ஜம்மு மற்றும் காஷ்மீர்


மகாராஷ்டிரா

# புதிய தலைமுறை அஞ்சலகங்கள்: ஒரு புதிய இந்தியாவுக்காக மீள் கற்பனைகளைச் சுமந்துள்ளவை:

புதிய தலைமுறை அஞ்சலகங்கள் பலவற்றை விரிவாக்கம் செய்வதன் மூலம், இந்திய அஞ்சல் துறை, தன்னுடைய நவீனமயமாக்கும் முனைப்புத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்கிறது. இந்தத் திட்டம், மரபார்ந்த அஞ்சல் வெளிகளை சமகாலத்துப் பாங்கு, இளைஞர்களை மையமிட்ட வடிவம், குடிமக்கள் நட்புணர்வுள்ள சேவை மையங்களாக உருமாற்றம் செய்து வருகிறது.

நாடு முழுவதிலுமுள்ள முன்னணிக் கல்விப்புல நிறுவனங்களில் மொத்தம் 45 புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. ஹைதராபாத் ஐ ஐ எம், அஹமதாபாத் ஐ ஐ ஐ எம், சூரத் எஸ் வி என் ஐ டி, மெட்ராஸ் ஐ ஐ டி,புனே பல்கலைக்கழகம், காஷ்மீர் பல்கலைக்கழகம் போன்றவையும், இவை போன்ற வேறு பல முக்கியக் கல்வி நிலையங்களும் இவற்றில் அடங்கும். இவற்றில், 2026 ஜனவரியில் மட்டும் 11 அஞ்சலககங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
செயலூக்கமுள்ள மாணவர்களின் பங்கேற்புடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள், நவீன உள்ளலங்காரங்கள், எண்ணி யல் சேவைகள், இலவச வை - ஃபை, மற்றும் புடைப்புருவாக்க வெளிகள் ஆகிய அம்சங்களைக் கொண்டவை. இந்திய அஞ்சல்துறையின் நீண்டகாலப் பாரம்ப ரியத்துடன், புதிய யுகத்தின் புத்துருவாக்கத்தைக் கலந்த இந்த முயற்சி, இளம் பயனாளர்களுடன் இந்திய அஞ்சல் துறையின் இணைப்பை வலுவாக்கியுள்ளது.


IIT ஹைதராபாத், தெலங்கானா



IIT மெட்ராஸ், தமிழ்நாடு


சாவித்திரிபாய் புலே புனே பல்கலைக்கழகம்



காஷ்மீர் பல்கலைக்கழகம்


ஜடவப்பூர் பல்கலைக்கழகம், மேற்கு வாங்கலாம்


ஜடவப்பூர் பல்கலைக்கழகம், மேற்கு வாங்கலாம்



குருக்ஷேத்ரா பல்கலைக்கழகம் ஹரியானா



PGI சண்டிகர், பஞ்சாப்



SVNIT சூரத், குஜராத்


IIM அகமதாபாத், குஜராத்


பிட்ஸ் பிலானி, ராஜஸ்தான்

## அஞ்சல் நாயகர்கள்:

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

குளிர்காலச் சூழல்கள் தொடர்ந்து நிலவிக்கொண்டிருந்தாலும் கூட, இந்திய அஞ்சல் துரையின் சேவை எந்த வித இடையூறும் இன்றித் தொடர்கிறது. காஸா துணை அஞ்சல் நிலையத்தின் கீழ், 21,499 அடி உயரத்தில் இருக்கும் Rangrik பகுதியில் - 19 டிகிரி c -சீதோஷ்ண நிலை இருக்கிறது. எனினும், துணை அஞ்சல் நிலைய உதவிப் போஸ்ட் மாஸ்டர் திரு. Santan Dolkar விளிம்புகளற்ற அஞ்சல் நடவடிக்கைகளைத் தொடர்வதை உறுதி செய்கிறார். பணிக்கடப்பாட்டுறுதிக்கு முன்னால், காலநிலையோ, தூரமோ எதுவம் தடைகளாக இருக்க முடியா என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்திருக்கிறார்.





வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் பகுதியின் அடர்ந்த காடுகளில், கிளை அஞ்சல் நிலையத்தின் போஸ்ட் மாஸ்டரான திரு. Rambati Poyam மேற்கொண்ட அர்ப்பணிப்பு உணர்வு மிக்க முயற்சிகள், இந்திய அஞ்சல் துறை இயற்கை யியல் தடைகளையெல்லாம் தாண்டி சேவைகளைக் கொண்டு சேர்க்க உதவுகின்றன. வெறுமனே அஞ்சல் சேவைகளை மட்டுமன்றி, நம்பிக்கை, பாதுகாப்பு, சுய சார்புத்தன்மை ஆகியவற்றையும் தொலைதூர மூலை முடுக்கு களிலுள்ள கிராமங்களுக்குக் கொண்டு சேர்க்கின்றன. சுகன்யா சம்ரிதி யோஜனா, ரெக்கரிங் டெபாசிட்டுகள், டைம் டெபாசிட்டுகள் போன்ற அஞ்சல் சேமிப்புத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள அணுகல் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம், இந்திய அஞ்சல் துறை வெறும் நிதியியல் அணுகலை மட்டும் உருவாக்கித் தரவில்லை; மாறாக, ஒரு மேம்பட்ட எதிர்காலத் தைக் கட்டமைத்து வடிவம் கொடுக்கக் குடும்பங்களுக்கு அதிகார வலிமையையும் வழங்குகிறது.

## சேவைகள், வார்த்தைகளுக்கு அப்பாலும் பேசும் போது...

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இந்தோர் அஞ்சல் மண்டலத்தின் கீழ், Khandwa டிவிஷன் பகுதியில், ஒரு தனித் தன்மை வாய்ந்த சூழல் எழுந்தது. அஞ்சல் ஆயுள் காப்பீட்டுகான அவுட்ரீச் பணிகளின் போது, ஒரு சந்தைப்படுத்தல் நிர்வாகி, ஒரு கேட்டல் மற்றும் பேச்சு ஆற்றலில் மாற்றுத்திறனாளியாக இருக்கும் ஒரு வாடிக்கையாளருடன் உரையாட முற்பட்ட போது அத்தகைய நிலை எழுந்தது. தகவல் தொடர்பில் அப்போதைய தடைகள் ஒருபுறமிருந்த போதிலும், அந்தச் சவால், உள்ளாக்கச் சேவை வழங்குவதற்கான வாய்ப்பாக உருமாற்றம் அடைந்தது. திரு. ஜுனைத் கான் Khandwa தலைமை அஞ்சல் நிலையத்தின் மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ் ஆவார். அவர், நுண்ணுணர்வோடு ஹெல்ப்லைன் மூலம் உதவி கோரினார்.



ஒரு காணொளி அழைப்பின் மூலம், குறியீட்டுச் சைகை மொழி மூலம் தகவல் தொடர்பு அங்கு நிறுவப்பட்டது. அந்தச் சைகை மொழி உரையாடலின் அடிப்படையில், அஞ்சல் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் குறித்த ஒட்டு மொத்த விவரங்களும் அந்த வாடிக்கையாளருக்கு எழுத்து வடிவிலும் வழங்கப்பட்டது. இந்தச் சிந்தனை பூர்வமான, உள்ளாக்க முயற்சி, அந்த வாடிக்கையாளர் ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்புப் பெறுவதன் மூலம் ஆதாயம் பெறுவதைச் சாத்தியப் படுத்தியது. அணுகல் செயற்திறன், கருணை, பொறுப்புணர்வு மிக்க சேவையளிப்பதில் இந்திய அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதியை ஒரு முன்மாதிரியாகக் காட்டியிருக்கும் நிகழ்ச்சி இது.

## சிறப்பு அம்சங்கள்:






வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

அயோத்தியா ராம் மந்திரில் நிறுவப்படும் பொருட்டு, மாபெரும் ராம் லல்லா சிற்பத்தைப் பாதுகாப்பாகவும், கவனமாகவும் கர்நாடகாவிலிருந்து அயோத்யா நகருக்கு இந்திய அஞ்சல் துறை கொண்டு சென்று சேர்ப்பித்தது, ஒரு குறிப்பிடத் தக்க பயணமாக அமைந்தது. தங்கம்,வெள்ளி, மற்றும் வைரங்களால் அலங்க ரிக்கப்பட்ட அந்த விக்கிரகம், மிக உயர்ந்தபட்ச அக்கறை, துல்லியத்துடன் வழங்கப்பட்டது. இது, பாதுகாப்பு, துல்லியம், கவுரவம் ஆகியவற்றுக்கு இந்திய அஞ்சல்துறையின் நிலைதடுமாறாத கடப்பாட்டுறுதியைச் சேவை வழங்கலில் எடுத்துக்காட்டுவதைப் பிரதிபலித்திருக்கிறது.



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.




குவாஹாத்தியில் 2003 - ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அஞ்சல்துறைப் பயிற்சி நிலையம், வடகிழக்குப்பகுதி முழுக்க உள்ள அஞ்சல் துறை அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோருக்குக் கட்டமைக்கப்பட்ட, நவீனப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. செயற்தகுதியுள்ள, நம்பிக்கைமிக்க, எதிர்காலத்தயார் நிலையில் உள்ள டாக் கர்மயோகிகளை வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறது. மிக நவீனமான, அப் டு டேட்டாக உரிய சாதனங்களோடும், கருத்துவளங்க ளோடும் அமைந்த வகுப்பறைகள், நிபுணத்துவமிக்க பேராசிரியர்கள், சமகாலத்தன்மை வாய்ந்த தங்குமிட வசதிகள் ஆகியவற்றுடன் தன்னைத் தயார் நிலையில் வைத்துள்ள இந்தப் பயிற்சி நிலையம், பணிகள் சார்ந்த நுட்பத்திறன், சேவைகளை மனதிற்கொண்ட விழுமியங்கள் நிரம்பிய பயிற்சியளிப்பதன் மூலம் இந்திய அஞ்சல் துரையின் தரத்தையம், செயற் திறனையும் வலிமைப்படுத்தும் நிறுவனமாக விளங்குகிறது.
குவாஹாத்தியின் இயற்கை எழில் நிரம்பிய காட்சிகளால் சூழப்பட்டுள்ள இந்த நிலையம், டாக் கர்மயோகிகள் கற்றுக்கொள்ள, வளர்ச்சி பெற, அர்ப்பணிப்பு ணர்வுடன் சேவை புரியத் தயாராவதற்கு ஓர் உத்வேகம் நிறைந்த சூழலை வழங்குகிறது.

## அஞ்சல்தலை சேகரிப்புகளின் மூலை: அஞ்சல் தலைகளும் கதைகளும்:






தேசிய இளைஞர் தினத்தன்று, இந்திய அஞ்சல் துறைச் செயலாளர் திருமதி. வந்திதா கவுல் அவர்கள், படங்கள் நிறைந்த அஞ்சலட்டைகளின் தொகுதி ஒன்றை வெளியிட்டார். அஞ்சல் சேவைகளின் டைரக்டர் ஜெனரல் திரு. ஜிதேந்திர குப்தா அவர்கள், அஞ்சல் சேவைகள் வாரியத்தின் உறுப்பினர்கள்,, முதுநிலை அதிகாரிகள் ஆகியோர் சுவாமி விவேகானந்தரின் காலத்தை விஞ்சி நிற்கும் கருத்துகள் மூலம் இளைஞர்களை உத்வேகப்படுத்தினர்.






ஆந்திரப்பிரதேச அஞ்சல் வட்டம், அமராவதி, குண்டூரில் மூன்றாவது உலகத் தெலுங்கு மாநாட்டின் போது, ஓர் அஞ்சல் சிறப்பு உறை வெளியிடப்பட்டது. தெலுங்கு மொழியின் செழுமை, கலாச்சாரப் பாரம்பரியம், இலக்கியம் ஆகியவற்றைக் கொண்டாடும் வகையில் இந்த அஞ்சல் உறை வெளியீடு நடந்தது. இந்த அஞ்சல் உறை வெளியிடும் நிகழ்ச்சி, மாண்புமிகு தகவல் தொடர்புகள் துறையின் ராஜீய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு. நர சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆகியோரின் சிறப்பு மிக்க முன்னிலையில் நடைபெற்றது.




வந்தே மாதரம் பாடலின் 150 -ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம், மற்றும் இந்தியாவின் 77 - ஆவது குடியரசு தின விழா ஆகியவற்றை முன்னிட்டு, தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் திருச்சிராப்பள்ளி மத்திய மண்டலம் ஒரு பொருண்மை சார்ந்த பட அஞ்சலட்டையை பிரெய்லி பொறிப்புகளுடன் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் வெளியிட்டது




1971 - ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் போரின் போது, ஒரு நிர்ணயகரமான தருணத்தை அடையாளப்படுத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க லோங்கோவாலா (1971 ) சண்டையைக் கொண்டாடிக் கவுரவிக்கும் முறையில், மும்பை ஜி பி ஓ அலுவலகத்தில் இந்திய அஞ்சல் துறை ஒரு சிறப்பு அஞ்சல் உறையை வெளியிட் டுள்ளது. 23 - ஆவது பஞ்சாப் ரெஜிமென்ட்டின் தீரத்தையும், இந்திய விமானப்படையின் 122 -ஆவது ஸ்க்வாட்ரன் பிரிவின் தீர்மானகரமான பாத்திர வகிப்பையும், இவ்விரு பிரிவுகளின் ஒருங்கிணைந்த பாதுகாப்புப் படைகளின் போரிடும் ஆற்றல் ஒரு முதன்மையான எதிரி ஜெனரலைத் துரத்தி வெற்றி கண்டதன் நினைவாக, மகாராஷ்டிரா அஞ்சல் வட்டம் மேற்கண்ட அஞ்சல் உறையை வெளியிட்டது.
இந்த வெளியீடு, முதன்மை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. அமிதாப் சிங் அவர்களால், அம்ருதா ஃபட்னாவிஸ் மற்றும் சிறப்புமிக்க பிரமுகர்களின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது. தேசியப் பெருமிதம் தியாகம், தீரம் ஆகியவற்றுக்குப் புகழ்மாலை சுட்டும் வகையில் இது அமைந்திருந்தது.




சமுதாயத்திலும், கல்வியிலும் செஸ் விளையாட்டின் முக்கியத்துவம் பற்றிய FIDE உலகளாவிய மாநாடு நடைபெற்றதையொட்டி, ஒரு சிறப்பு அஞ்சல் உறை ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. நிர்மல்ஜித் சிங் அவர்களால் வெளியிடப்பட்டது.



2026 - புத்தாண்டு தினத்தையொட்டி, டெல்லி அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், திரு.கர்னல் அகிலேஷ் குமார் பாண்டே அஞ்சல் தலைகள் சேகரிப்பு தொடர்பான 2026 -ஆம் ஆண்டிற்கான டெஸ்க் காலண்டரை வெளியிட்டார். டெல்லியின் வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் தொடர்பான அஞ்சல் தலைகள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன

## முக்கிய அம்சங்கள்



ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் கட்டாக்கில் உள்ள நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்த இடத்தில் இந்திய தேசிய இராணுவம் தொடர்பான அஞ்சல் தலைகளின் காட்சிக்கூடம், மேதகு இந்தியக்குடியரசின் துணைத்தலைவர் திரு. சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு ஒதிஷா மாநில ஆளுநர் மேதகு திரு. டாக்டர் ஹரி பாபு Kambhampati அவர்கள், மாண்புமிகு ஒதிஷா மாநில முதல்வர் திரு. மோகன் சரண் மஜ்ஹி மற்றும் ஏனைய முக்கியப் பிரமுகர்களின் முன்னிலையில் இத் தொடக்க விழா நடைபெற்றது. இந்தக் காட்சிக்கூடம், தேர்ந்தெடுக்கப்பட்ட அஞ்சல் தலைகள், அஞ்சல் தலைகள் சேகரித்தல் தொடர்பான பொருள்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் வாழ்க்கை மற்றும் இலட்சியங்கள், சுதந்திரப்போராட்டம் ஆகியவற்றைப் பற்றி மேற்கண்ட அஞ்சல் தலைகளும் பொருள்களும் சித்தரிக்கின்றன. இந்த நிகழ்வைச் சிறப்பிக்கும் விதத்தில், சிறப்பு அஞ்சல் உறையொன்றும் வெளியிடப்பட்டது.




மஹாராஷ்டிரா அஞ்சல் வட்டம், ஒரு பன்முகப்பட்ட சிறப்புகள் நிரம்பிய விழா ஒன்றை, தொன்மையான மும்பை ஜி.பி.ஓ. அலுவலகத்தைக் கவுரவிக்கும் விதத்தில் ஏற்பாடு செய்து நடத்தியது. ஒரு சிறப்பு அஞ்சல் உறையை வெளியிட்டு, அஞ்சல் ஊழியர்களுக்கு 200 மின்- பைக்குகளை வழங்கும் நிகழ்வைக் கவுரவித்தது. திரு.மனோஜ் குமார், மகாராஷ்டிரா அஞ்சல் வட்டத் தின் DPS ( Mails & BD ),திருமதி. சிம்ரன் கவுர், DPS ( HQ ), மற்றும் ஏனைய சிறப்பு விருந்தினர்களின் முன்னிலையில் முதல் படத்தொகுப்பு ஆல்பம் திருமதி. அம்ருதா ஃபபட்னாவிஸ் அவர்களிடம் வழங்கப்பட்டது.




குஜராத் அஞ்சல் வட்டத்தின் வடோதரா கிழக்கு மண்டலத்தின் ஏற்பாட்டில், மாவட்ட அளவிலான தபால் தலைகள் சேகரித்தல் பற்றிய கண்காட்சி - vadopex - 2026, வடோதரா Akota Atithi Gruh என்ற இடத்தில், 2026, ஜனவரி, 9 அன்று நடைபெற்றது. அஞ்சல் தலைகள் சேகரிக்கும் கலையை முன்னெடுத்துச் செல்லவும், இந்திய அஞ்சல் துறையின் செழுமையான பாரம்பர்யத்தைக் காட்சிப்படுத்துவதுமே இதன் நோக்கம். வடோதரா மண்டலத்தின் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு.தினேஷ் குமார் ஷர்மா அவர்களால் இந்தக் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டது. பத்ம ஸ்ரீ பரேஷ் ரத்வா அவர்களால் தீட்டப்பட்ட மரபார்ந்த பிதோரா ஓவியங்க ளைக் காட்சிப்படுத்தும் ஒரு சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு, கலை, கலாச்சா ரம் ஆகியவற்றுக்கு இந்திய அஞ்சல் துரையின் ஆதரவை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக அமைந்தது. அஞ்சல் தலைகள் சேகரிப்போர், பரோடா அஞ்சல் தலைகள் சேகரிப்புக் கழகம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், மாணவர்கள், மற்றும் காட்சிப்படுத்தியோர் ஆகியோரிடமிருந்து உத்வேகம் நிறைந்த பங்கேற்பை இந்த நிகழ்ச்சி கண்டது. அஞ்சல் பாரம்பரியத்தையும், அஞ்சல் தலைகள் சேகரிப்புக்கலையையும் கொண்டாடும் ஒரு வெற்றிகரமான நிகழ்வாக மேற்கண்ட பங்கேற்பு ஆக்கியது.




ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் கியோஞ்சிஹார் - இலிலுள்ள அரசாங்கப் பெண்கள் கல்லூரியில் ஐந்தாவது மாவட்ட அளவிலான அஞ்சல் தலைகள் சேகரிப்புக் கண் காட்சியான KENDUJHARPEX அமைத்து நடத்தப்பட்டது. கியோஞ்சிஹார் மாவட்ட அஞ்சல் தலைகள் சேகரிப்புச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இது நடைபெற்றது. இதன் நிறைவு விழா, 10. 01. 2026 அன்று ஒதிஷா அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அவர்களின் சிறப்பான முன்னிலை வகிப்பினால் பொலிவு பெற்றது. மாணவர்களிடமும், அஞ்சல் தலைகள் சேகரிப்போரிடமும் அஞ்சல் தலைகள் சேகரிப்பின் முக்கியத்துவம் பற்றிய மதிப்புமிக்க கருத்து களை அவர் பகிர்ந்து கொண்டார்.



2026, ஜனவரி 26 அன்று, டெல்லி செங்கோட்டையில் பாரத் பர்வ் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த இந்திய அஞ்சல் துறையின் அரங்கிற்கு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் வருகை தந்து பார்வையிட்டார். டெல்லி அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல், திரு. கர்னல் அகிலேஷ் குமார் பாண்டே அவர்கள் அமைச்சரை வரவேற்று, அஞ்சல் துறை அரங்கில் வழங்கப்படும் சேவைகள் பற்றி விளக்கினார். ஆதார் அட்டைக்கான பதிவுகள், அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி, இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் பேங்க் போன்ற சேவைகள் குறித்து அமைச்சர் ஷெகாவத் அவர்களுக்கு விளக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அஞ்சல் துறையின் முன்னெடுப்புகளைப் பாராட்டியதுடன், க்யூ ஆர் கோட் மூலம் எண்ணியல் முறையில் பணம் செலுத்தி 'ராமாயண' ஃபிரேம் ஒன்றை வாங்கி மகிழ்ந்தார்.




38 -ஆவது அகில இந்திய போஸ்டல் சுமைதூக்கும் போட்டி, பவர் லிப்ட்டிங், & மிகச் சிறந்த உடற்திறன் போட்டிப்பந்தயம் 2026, ஜனவரி 27 அன்று சென்னை யில் தொடங்கியது. தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தால் இது ஏற்பளிக்கப்பட்டது. இந்தப்போட்டிப் பந்தயம், தொடங்கப்பட்டது என்ற அறிவிப்பைத் தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் முதன்மைப் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திருமதி மரியம்மா தாமஸ் அவர்கள் வெளியிட்டார். இந்த நான்கு நாள் பந்தயம், ஜனவரி 30, 2026 அன்று நிறைவடைந்தது. நாடு நெடுகிலுமிருந்து அஞ்சல் துறை தடகள வீரர் களை இந்த நிகழ்வு ஒன்றாகத் திரட்டியிருந்தது. தோழமை, விளையாட்டுப் போட்டிப் பங்கேற்புப் பண்பு, வலிமை - ஆகியவற்றை உத்வேகமிக்க முறையில் இந்த ஒன்று திரட்டல் அமைத்திருந்தது




பீகார் மாநிலம், Marhaura வில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த Dak Chaupal மூலமாக, இந்திய அஞ்சல் துறை உள்ளூர் மக்கள் சமூகங்களைத் தொடர்பு கொண்டு, அஞ்சல் துறையின்சேமிப்புத்திட்டங்கள், காப்பீட்டுத் திட்டங்கள், எண்ணியல் வசதிகள் போன்ற பல்வேறு சேவைகளைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பியது. இந்த முன்னெடுப்பு, பொதுமக்கள் நலத்திட்டங்களின் கீழ், குழந்தைகளுக்கான கணக்குகளைத் தொடங்குவது உட்பட, குடிமக்களுடன் நேரடியான கலந்துரையாடல் நிகழ்த்த முடிவதைச் சாத்தியமாக்கியது



தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் வாலாஜாபேட்டையில், தயாளன் பிரைமரி மற்றும் நர்சரிப்பள்ளியில் Dhai Akhar கடிதமெழுதும் போட்டி நடைபெற்ற போது, இளம் மாணவர்களிடமிருந்து உத்வேகம் நிறைந்த பங்கேற்பைக் காண முடிந்தது. இது, கையெழுத்துத் திறனையும், அதன் மூலமான தகவல் தொடர்பையும், மிக இளம் வயதிலேயே படைப்புருவாக்கத் திறனையும் முன்னெடுக்க உதவுவதாக அமைந்தது.




13 அஞ்சல் வட்டங்களிலிருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொண்ட PLI & Rpli பட்டறை புது டெல்லியில் நடத்தப்பட்டது. நாடு தழுவிய பாலிசி ஹோல்டர்க ளுக்குச் சேவை வழங்கலை வலிமைப்படுத்துவதில் மேற்கொள்ள வேண்டிய கவனக்குவிப்பை இந்தப்பட்டறை விவாதித்தது. அஞ்சல் வட்டங்கள் வாரியான செயற்திறன் வெளிப்பாடுகளையும், முதன்மையான முன்னெடுப்புகளையும் பற்றிய முழுமையான மீளாய்வும் இதில் உள்ளடங்கும். நிதியியல் சேவைகள் பிரிவு உறுப்பினர் திரு. மனிஷா சின்ஹா வால் நிகழ்த்தப்பட்ட திறவுகோல் உரை செயற்திறன், வெளிவட்டாரங்களைச் சென்றடைதல்,வாடிக்கையாளர் களை மையமிட்ட வளர்ச்சி ஆகிய அம்சங்களுக்குப் பகிர்ந்து கொள்ளப்படும் கடப்பாட்டுறுதி யை அவர் மீள் உறுதிப்படுத்தினார். இந்த அமர்வு, CGM ( PLI ) திரு. TanWeer QAMAR Mohammad அவர்களின் முன்னிலையில் நடைபெற்றதைத் தொடர்ந்து ஓர் உள்ளீடுகள் நிறைந்த பகிர்தலுடன் பட்டறை நிறைவடைந்தது.




தேசிய பெண் குழந்தை தினத்தையொட்டி, தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் சார்பில் ஒரு சிறப்பு முரல் ஓவியங்கள் வரையும் நிகழ்வு பெண் குழந்தைகளுக் காக பாய்லர் ப்ராஜக்ட் துணை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. பெண் குழந்தைகளுக்கான நிதியியல் பாதுகாப்பு, அஞ்சல் சேமிப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை முன்னெடுக்க உதவியது.




Thalarkulam கிராம மக்களின் செயலூக்கமிக்க பங்கேற்புடன், அக்கிராமம் ஒரு சம்பூர்ண பீமா கிராம் எனவும், சம்பூரண சுகன்யா கிராம் எனவும் பிரகடனம் செய்யப்பட்டது. முழுமையான காப்பீட்டுப் பாதுகாப்பு, சேமிப்புத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதில் கூட்டான நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பிரதிபலித்துள்ளது.





கவுரவம், சௌகர்யம் ஆகியவற்றைப் பணி செய்யும் இடங்களில் முன்னெடுக் கும் பொருட்டு, ஒரு நலத்திட்ட ஏற்பாடாக, பெல்லாரி அஞ்சல் நிலையக் கண் காணிப்பாளர் அன்னையர் பாலூட்டும் அறை ஒன்றைத் தொடங்கி வைத்தார். பணியாளர்களின் நல வாழ்வுக்குத் துரையின் கடப்பாட்டுறுதியை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.





வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூர் அருகில், குருத் கிராமத்தில், இந்திய அஞ்சல் துறை கைவினைக் கலைஞர்களுக்குக் கருவிகள் பெட்டிகளை பிரதம மந்திரியின் விஸ்வகர்மா யோஜனா வின் கீழ் வழங்கியது. உள்ளூர்க் கை வினைத்திறன்களை அதிகார வலிமையளித்து மரபார்ந்த வாழ்வாதாரங்களை ஆதரிக்கும் திட்டம் இது.

सत्यमेव जयते
भारत सरकार

भारतीय डाक
डाक सेवा-जन सेवा
India Post
Dak Sewa-Jan Sewa

www.indiapost.gov.in